**பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகம் - 2013**

பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட 1979 இன் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் ஏற்பாடுகளின் 23 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும்

வகையில் நிறுவகத்தால் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அததிகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் இறுதிப் பொருளிருப்பு என அத்தினத்தில் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் காட்டப்பட்ட தொகையான ரூபா 385,676 இனை காட்டுவதற்குப் பதிலாக புத்தக மீதியான ரூபா 456,629 காட்டப்பட்டதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 70,953 ஆன தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) வெகுமதிகள் மற்றும் நன்கொடைகளின் மற்றும் மானியங்களின் கீழ் பெறப்பட்டிருந்த ரூபா 637,957 பெறுமதியான 03 கணனிகள், அச்சிடும் இயந்திரமொன்று மற்றும் வேனொன்று ஆகியன முன்னைய ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்டிருந்ததெனினும் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வெகுமதிகள் மற்றும் நன்கொடைகள் கணக்கிற்கு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2013 திசம்பர் 31 ஆம் திகதியில் நிதிக்கூற்றுக்களின் காட்டப்பட்டிருந்த ‘‘வெளிப்படுத்தப்பட்ட இருப்பு’’ரூபா 1,142,616 ஆக இருந்ததுடன் களஞ்சியப் பதிவேட்டின் படி அத்தினத்தில் அம்மீதி ரூபா 1,024,368 ஆக இருந்தமையால் அம் மீதிகளிடையே ரூபா 118,248 ஆன வேறுபாடு இருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 179,521 கூட்டுத்தொகையான 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்கள் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக் கூற்றுக்களில் ஏனைய நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்த 05 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள ரூபா 18,249 கூட்டுத்தொகையான இரு பொறுப்புகள் மற்றும் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலதமாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்த மீளளிக்கப்படவேண்டிய நூலக வைப்புக்கள் ரூபா 4,000 உம் 2013 திசெம்பர் 31 இல் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இனங்காமை

பின்வரும் சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் அமைந்தொழுகாமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 757 | மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின்படி திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதியப்பட்ட இருப்புக்களிலான பொருட்களில் குறைவு 83 அலகுகளாக இருந்ததுடன் இருப்பு மிகையானது 342 அலகுகள் ஆகும். இம் மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பில் பொருத்தமான |

| | | |
|---|---|---|
| | | வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கான தாபனக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின்போது கல்விசார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட ரூபா 5,389,165 கூட்டுத்தொகையான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளின் சரியான தன்மையைப் பரிசீலிப்பதற்கு கல்விசார் ஊழியர்களின் வரவுப் பதிவெடுகள் மற்றும் விடுகைப் பதிவேடுகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | களஞ்சியம் மற்றும் ஏனைய பிரிவுகளிலுள்ள கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் நிலையான சொத்துக்கள் பதிவேடிற்கும் நிதிக் கூற்றுக்களின் பட்டோலைகளுக்கு மிடையே ரூபா 4,019,813 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. |

## 2.5 போதுமான அதிகாரத்தால் உறுப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

ஓய்வுபெற்ற சிரேஸ்ட உதவி நிதியாளர் 2013 ஏப்ரல் 17 ஆம் திகதி முதல் அப்பதவிக்காக 06 மாத காலத்திற்கு முகாமைத்துவ சபையின் அனுமதியுடன் மட்டும் நியமிக்கப்பட்டு அதற்காக ரூபா 60,000 ஆக மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2013 ஒக்தோபர் 17 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஆகக்கூடிய 06 மாத காலத்திற்கு அவ் உத்தியோகத்தரிடம் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு உயர்கல்வி அமைச்சுச் செயலாளரின் அனுமதி பெறப்பட்டிருந்தது. அமைச்சரவை அனுமதி இன்றி சேவையின் அவசியம் எனக் குறிப்பிட்டு அந்த நியமனம் வழங்கப்பட்டு 2013 ஏப்ரல் 17 ஆம் திகதி தொடக்கம் 2014 ஏப்ரல் 12 ஆம் திகதி வரை ரூபா 718,064 ஆன கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததுடன் நடமாடும் மற்றும் நிலையான தொலைபேசிச் சிட்டைகளுக்கான ரூபா 30,607 ஆன தொகை மீளளிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான குறை ரூபா 3,467,632 ஆக இருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் குறையானது ரூபா 2,709,969 ஆக இருந்தது. இதன் படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது

மீளாய்வாண்டின் குறையானது ரூபா 757,663 ஆல் அதிகரித்திருந்ததுடன் அவ்வாறான பற்றாக்குறை அதிகரிப்பதற்கு கற்கைநெறிகளின் வருமானம் ரூபா 2,469,162 ஆல் குறைவடைந்தமை மற்றும் கல்விசார் சேவைகளின் சம்பளம் மற்றும் ஊதியம் என்பன ரூபா 2,944,726 ஆல் அதிகரித்தமை என்பன விசேடமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 கல்விசார் செயலாற்றல்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின்போது நிறுவகத்தால் நடாத்தப்படட ஒரு வருடகால 07 கற்கை நெறிகளில் பௌத்த கற்கை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை நெறி, பாளி கற்கை கலைமானி பட்ட கற்கை நெறி, பௌத்த ஆயுர்வேத விரிவுரைக் கற்கை பட்டப்பின் படிப்பு டிப்ளோமாக் கற்கைநெறி மற்றும் பௌத்த ஆயுர்வேத விரிவுரைக் கலைமானி கற்கை நெறி என்பன தொடர்பாக மாணவர்களைப் பதிவு செய்தல் மொத்த மாணவர்கள் பதிவில் நூற்றுக்கு 16% ஆக மட்டுமே இருந்தது.

(ஆ) மொத்த மாணவர் பதிவுகளுடன் ஒப்பிடும் போது பௌத்த கற்கை கலைமானி பட்டக் கற்கை நெறிக்காக மொத்த மாணவர் பதிவின் நூற்றுக்கு 82 சதவீதமான பங்களிப்பும் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா மற்றும் கலைமானி கற்கைநெறி (சிங்கப்பூர்) என்பவற்றுக்காக மொத்த மாணவர் பதிவின் நூற்றுக்கு 02 சதவீதம் மட்டுமான குறைந்த மாணவர் பங்களிப்பும் ஆகும்.

### (இ) பரீட்சைகளுக்கும் தோற்றுதலும், பரீட்சைப் பெறுபேறுகளும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2013 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 456 ஆக இருந்ததுடன், பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 373 ஆகவும் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 298 ஆகவும் இருந்தன.

(ii) நிறுவகத்தால் நடாத்தப்பட்ட பௌத்தக் கற்கைகள் கலாநிதி பட்டம் மற்றும் பௌத்தக் கற்கைகள் கலாநிதி விஷாரத பட்டப்படிப்புக்களை மேற்கொண்ட 203 ஆன மொத்த மாணவர் எண்ணிக்கையில் மீளாய்வாண்டின் போது பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை 17 மட்டுமேயாகும்.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிக்கப்பட்டன.

(அ) 1984 தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஈ.டபிள்யூ. குணதிலக நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ள மீதியான ரூபா 226,987 மற்றும் வெளிநாட்டு புலமைப்பரிசில் நன்கொடை ரூபா 736,094 என்பன வருடக்கணக்காக குறித்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 38,212 பெறுமதியான எடுத்துச் செல்லப்பட்டு மீள ஒப்படைக்கப்படாத நூல்கள் 170 ஆக இருந்ததுடன் நூல்களைப் பெற்றவர்களுடன் இருப்பிடத்தை விட்டு நீங்கியிருந்தமை மற்றும் மரணமான காரணங்களால் இந்த நூல்கள் மீள பெற்றுக்கொள்ளல் ஐயத்திறகிடமானதாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 4.3 பதவியணியினர் நிருவாகம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட பதவியணியினை 02 வெற்றிடங்கள் மட்டுமே நிலவியதாக அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

## 5.1 செயற்பாட்டுத் திட்டம்

நிறுவகத்தால் 2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயற்பாட்டுத் திட்டம் முறையான மாதிரியின் படியும் முன்னேற்றத்தை வேறு வேறாக வெளிப்படுத்தக்கூடிய வகையிலும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு உத்தேசிக்கும் கால அட்டவணை, பாதிடப்பட்ட ஏற்பாடு, செலவுக்கான நிதியிடல், அங்கீகரிக்கப்பட்ட பொறுப்புக் கூறும் உத்தியோகத்தர் ஆகிய விடயங்களையும் உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நிரந்தர கட்டிடமொன்றினை நிர்மாணிக்கும் செயற்பாடு மற்றும் பௌத்த ஆயுர்வேத ஆலோசனைக் கற்கை நெறி மற்றும் புதிய கற்கை நெறிகள் தொடர்பாக பிரயோக கற்கைகளுக்காக புதிய பிரிவொன்றை நிறுவுதல் போன்ற செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது பாதிடப்பட்ட நிதியேற்பாடுகள் ஒதுக்குகள் மற்றும் உள்ளவாறான செலவினங்களை இணக்கம் செய்த போது நூற்றுக்கு 10 தொடக்கம் நூற்றுக்கு 161 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் நிலவின. இதற்கமைய, பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலுமுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு
(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஈ) நூலகக் கட்டுப்பாடு
(உ) வாகனக் கட்டுப்பாடு